IntSym 2019
9th International Symposium

# MULTI-SECTORAL COLLABORATION AND ECONOMIC GROWTH: A STUDY BASED ON SRI LANKA FROM 1987 TO 2017

**M.N.F. Hasoona[143] & A.A.M. Nufile[144]**

Correspondence: hasoonanafin@gmail.com

ABSTRACT

This research was carry out taking about Muli-sectoral collaboration and Economic Growth. Sri Lanka is an Agricultural country. Which has a variety of (public, private, non-profit) organization. Also there is a huge vastness of its Economic Growth and Economic Development hazards today. The overwhelming collaboration between these sectors leads to the Economic Growth and Economic Development of the country. So that, This study is to Conducted find out the objectives of figuring out the ways and means to rectify this situation, identifying how influent between Multi-sector to collaborate and figure out the solution increasing collaboration between these sectors. The annual reports of the central bank (1995-2017), central bank data, websites have been used as the sources of data, and this research has been carried out on the basis of these secondary level data. The regression model has been used to evaluate the data on the basis of the data during the period of 1987 to 2017. Here GDP has been used as dependent variable and also Human Development Index, Property Rights Index, Civil Liberties Index, Financial Freedom Index have been used as independent variables. The results have been achieved after a thorough analysis of the collected data through Minitab and Ms excel. In addition to this, it has also been mentioned that the consequences of the unification of the Multi-sector and the importance of the integration of verses. Solutions are based on data. In order to achieve economic growth and development through the integration of Multi-sectoral cohesion cantered on this. So, here are the results such as on financial independence and Human security want to focus and maintain with efficiency between sectors, companies etc. Also best leadership, motivation, cooperation and trust these must be included between Multi-sectors.

**Keywords:** multi- sector, civil liberties index, Property Rights Index, Financial Freedom Index, motivation

**ஆய்வுச்சுருக்கம்**

*பல்துறைகளைக் கொண்ட இலங்கையானது தனது பொருளாதார வளரச்சியையும் பொருளாதார அபிவிருத்தியையும் உச்சளவில் அடைந்து கொள்வதில் இன்று பல்துறைகள் சார்ந்த பிரச்சினைகள் தடையாக அமைகின்றதனைக் காணலாம். இப்பல்துறைகளின் இடையே அதிகளவில் ஒன்றிணைவு இன்மையானது நாட்டு பொருளாதார வளரச்சியைப்பின் தங்கச் செய்கிறது. எனவே இங்கு இந்நிலையை சரி செய்யும் முகமாக பல் துறைகளின் இடையே ஒன்றிணைவினை ஏற்படுத்தல், நாட்டு பொருளாதார வளரச்சியை எய்த துணை செய்யும் வகையில் அதற்கான பல்துறை சார் ஒன்றிணைவுக் காரணிகளை முன்வைத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு இணையதளம், ஆண்டறிக்கைகள் (1995 - 2017), மத்திய வங்கித்தரவுகள் மற்றும் இதர புள்ளிவிபரத்தரவுகள் என்பன தரவு மூலங்களாகக் கொளள்ப்பட்டுள்ளன. 1987 - 2017 வரையான காலத்தொடர் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தரவுகளை மதிப்பீடு செய்வதற்காக''பிற்செலவு ஆய்வு'' பயன்படுத்தப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள்* Minitab *மற்றும்* Ms-excel *மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் பல்துறைகளின் அதிகளவில் ஒன்றிணைவு இன்மையால் ஏற்படும் விளைவுகள் மற்றும் பல்துறைகளின் ஒன்றிணைவின் முக்கியத்துவம் என்பன*

[143] Department of Economics and Statistics, South Eastern University of Sri Lanka.
[144] Department of Economics and Statistics, South Eastern University of Sri Lanka.

*தொடரப்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் பல்துறையின் ஒன்றிணைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான விளக்கமும் பகுப்பாய்வும் பொருளாதார வளர்ச்சியை மையப்படுத்தியதாக முன்வைக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டிருப்பதனையும் காணலாம். பல்துறைளின் ஒன்றிணைவினை மேம்படுத்தல் மூலம் பொருளாதார வளரச்சி மற்றும் அபிவிருத்தியை எய்தும் பொருட்டு தீர்வுகளும் தரவின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளதோடு கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவும் வகையிலும் இவ்வாய்வு காணப்படுகிறது. அந்தவகையில் நிதிசார் சுதந்திரம் மற்றும் மனித பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தல் அத்துடன், சிறந்த தலைமைத்துவம், ஊக்குவிப்பு , ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கை என்பன நிறுவனங்களின் இடையேயும் பல்துறைகளின் இடையேயும் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பன போன்ற முடிவுகள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.*

**கலைச் சொற்கள்:** பல்துறை, குடிசார் உரிமைச் சுட்டெண், சொத்துரிமைச் சுட்டெண், நிதிச்சுதந்திரச் சுட்டெண், ஊக்குவிப்பு

## அறிமுகம

ஆய்வு அறிமுகம்

பல் துறைகளின் ஒன்றிணைவு என்பது ஒரு பன்முகத்துறையினது கூட்டாண்மை ஆகும். இதன் விளைவாக அரசாங்கம், தனியார் மற்றும் இலாப பொது அமைப்புக்கள், சமூக குழுக்கள் மற்றும் தனி சமுதாய உறுப்பினர்கள் முழு சமூகத்தையும் பாதிக்கும் பிரச்சினைகளை தீர்க்க ஒன்றுபடும் செயற்பாடு அல்லது அமைப்பு முறை ஆகும் (Marya, 1984). பொருளாதார வளர்ச்சி எனும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சி எனப்படுகின்றது. ஒரு நாட்டு மொத்த பொருளாதார செயலாற்றத்தையும் விளக்குவதற்கு பொருளாதார வளர்ச்சியானது ஒரு முக்கிய குறிகாட்டியாக கருதப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சியானது பேரினப் பொருளாதார செயலாற்றத்தின் ஒரு அளவுகோல் ஆகும் (Acharya, 2002). இதனாலேயே நாடுகள் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஒரு நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு உயர் பொருளாதார வளர்ச்சியுடன் சாதகமான பொருளாதார கட்டமைப்பு மாற்றம், குறித்த வேலையின்மை வீதம், குறைந்த பணவீக்கம், வருமான பங்கீட்டில் காணப்படும் சமமின்மைக்குறைப்புடன் வறுமைக்குறைப்பு, சமூக நலக்குறிகாட்டிகளில் மேம்பட்ட நிலையை அடைதல் என்பன முக்கியமாகின்றன (Amirthalingam, 2008). எனவே இவற்றினை சரிவர அடைந்து கொள்ள பல்துறைகளின் ஒன்றிணைவின் மூலம் நன்மையை பெறமுடியுமாகின்றது.

பல்துறைகள் எனும் போது ஒரு நாட்டின் முதுகெழும்பாக இருக்கும். பொதுத்துறை, தனியார் துறை மற்றும் இலாபமற்ற துறை என்பன போன்றன இதிலடங்குகின்றன. இவற்றின் ஒன்றிணைந்த செயலாற்றமானது பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்கின்றதுடன் பேரினப் பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதிலும் பங்களிப்பினைச் செய்கின்றது. உலகினில் சமூகங்கள், தொழில்கள், சமூகத்துறை, நிறுவனங்கள், குடும்பங்கள் மற்றும் தனிநபர் பொருளாதார மாற்றத்தின் சவால்களுடன் போராடுகின்றனர். இலங்கையில் பிரதான வருமானம் பெறும் துறையாக சேவைத்துறை, கைத்தொழில் துறை விளங்குகின்றது. இன்று சுற்றுலாத்துறையும் மூன்றாம் இடத்தினை பெறுகின்றது (இலங்கை மத்திய வங்கி, 2017).

இவற்றில் பொருளாதார மாற்றத்தினால் சவால்கள் எழுந்துள்ளமையைக் காணலாம். அவ்வப்போது பொருளாதார வளர்ச்சி இருந்தாலும் இன்று வீழ்ச்சியை நோக்கி செல்வதைக் காணலாம். எனவே பொருளாதார வளர்ச்சி மற்றும் உருமாற்றம் ஆகியவற்றுடன் வியாபாரச்சூழல், சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல காரணிகளை கருத வேண்டும். அத்துடன் நிலைத்திருதன்மை, கல்வி மற்றும் திறன்பயிற்சி, நிலப்பயன்பாடு, தொழிநுட்ப உட்கட்டமைப்பு, வீடுகள், சமூக சேவைகள் மற்றும் அரச கொள்கைகளை ஒரே நேரத்தில் கவனிக்க வேண்டும். இவை ஒரு நிறுவனம் மூலம் மட்டும் செயற்பாட்டுக்காக அன்றி ஒரு துறை சார்பாக நோக்கப்பட வேண்டும். எனவே நிறுவனங்கள், துறைகள் இடையே ஒத்துழைப்பு வேண்டும் (Morries, 2016).

**ஆய்வின் முக்கியத்துவம்**

இன்றளவு இலங்கையைப் பொறுத்தமட்டில் பல்வேறு தேவைப்பாடுகளையும் ஆய்வு இடைவெளிகளை அறிந்த புதிய தேடல்களையும் தன்னகம் சுமந்து கொண்டு செயற்படுகின்ற ஒரு நாடாக இலங்கை காணப்படுகின்றது. இவ்வாய்வினைப் பொறுத்தமட்டில் இலங்கையின் நிலைப்பிற்கும் நிலைமைற்கும் ஏற்ப மிகவும் வேண்டப்படுகின்ற ஒரு விடயமாகவும் அடையாளப்படுத்தலாம். 'பல்துறைகளின் ஒன்றிணைவும் பொருளாதார வளர்ச்சியும்' எனும் தலைப்பினை கொண்ட இவ்வாய்வானது கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஏனைய பொருளாதார முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கும் முக்கியமாகின்றது. இன்றைய இலங்கையைப் பொறுத்தமட்டில் பல துறைகள் இருக்கின்றதனை நாம் அறிவோம். எனினும் அவை இன்று சரியான திட்டமிடலின்றியும், ஒழுங்கமைப்பு இன்றியும் வினைத்திறனாக்கம் சரியாக இன்றியும் பல கோணங்களில் செயற்பட்டு வருவதைக் காணலாம். இதன் விளைவாகவே இன்றளவும் இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக இருப்பதுடன் பொருளாதார வளர்ச்சியும் சரியாக அடைய முடியாது இருக்கின்றது. கடந்த 2016 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 4.3 வீதம் ஆகும். ஆனால் 2017 இன் பொருளாதார வளர்ச்சி 3.2 வீதமாக குறைந்திருப்பதை காணலாம். இதற்கு மிக முக்கிய காரணங்களுள் ஒன்றாக பல்துறைகளிடையே ஒன்றிணைவு, கலந்தாலோசனை என்பன இடம்பெறாது தாமாக செயற்படுகின்றதனை அடையாளப்படுத்தலாம். எனவே இவ்வாய்வானது ஒழுங்கான திட்டமிடல், வினைத்திறனாக்கம், துறைகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டுக்கு தூண்டுவதோடு பொருளாதார வளர்ச்சியை எய்தவும் முக்கியமான ஒரு விடயமாக கருதப்படுகின்றது.

மேலும் ''சிக்கலான மற்றும் பிணைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு மாற்றங்கள் செய்ய ஒரு சமூகம் ஒத்துழைக்க வேண்டும். எந்தவொரு நபரும், எந்தவொரு அமைப்பும் ஒரு பிரிவினரும் கூட பிரச்சினையில் சம்பந்தப்படாதவராயினும் எல்லோரது ஒத்துழைப்பு இன்றி சமூகமாக இயங்க முடியாது'' (Marya, 1984). இக்கருத்துப்படி பல்துறைகளின் ஒன்றிணைப்பின் முக்கியத்துவமானது வெளிக்காட்டப்படுகின்றது.

அத்துடன் ''கடுமையான சமூக பிரச்சினைகளை சமாளிக்க மற்றும் பயனுள்ள சமூக விளைவுகளை அடைய விரும்பும் மக்கள் ஜனநாயக சமூகத்தின் வணிக, இலாப நோக்கமற்ற மற்றும் தொண்டு நிறுவனங்கள், ஊடகங்கள், சமூகம், தனியார் மற்றும் அரசாங்கத்தின் பல துறைகள் திறமையாக சவால்களை சமாளிக்க ஒத்துழைப்பதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். அத்துடன் ஒரு பிரிவுகளில் நிறுவனங்களினால் தனியாக அடைய முடியாத ஒரு இலக்கினை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட துறைகள் நிறுவனங்கள், தகவல், வளங்கள், செயற்பாடுகள் மற்றும் திறன்கள் இணைதல் மூலம் அடையலாம்'' (ப்ரைசன், க்ராஸ்பி மற்றும் ஸ்டோன், 2006). போன்ற கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இதற்கு மேலாக ''வன்முறைகளை தடுக்க பல்துறைகளின் ஒன்றிணைவானது அவசியமாகின்றது'' (சாவோ மற்றும் டேவிஸ், 2014 ஏப்ரல்). இக்கருத்தினை பல்துறைகளின் ஒன்றிணைப்பின் முக்கியத்துவத்தினை விளக்க முன்வைத்திருக்கின்றனர். அத்துடன் பல்துறைகளின் ஒன்றிணைப்பின் மூலம் பின்வரும் நன்மைகளை அடையலாம் என (வாரன், ஜான்ஸ்டன் மற்றும் ருப்போலோ, 2014) குறிப்பிடுகின்றனர். அதன்படி பல்நோக்கு தகவல் தொடர்பு சேவைகளை விருத்தி செய்யலாம், குழந்தைகள், இளைஞர்கள், குடும்பங்களிடையே ஒருங்கிணைந்த ஆதரவு மற்றும் நிலையான வழிகாட்டல் மேற்கொள்ளலாம், வள வினைத்திறனாக்கம், சேவை இடைவெளி குறைப்பு, அதிகமான வாடிக்கையாளரின் திருப்தி போன்றவற்றை அடையப் பெறலாம் என்கின்றனர். எனவே மேற்படி கருத்துக்களாவன பல்துறைகளின் ஒன்றிணைவின் முக்கியத்துவத்தினையும் அதன் தேவைப்பாட்டினையும் குறிப்பிடுகின்றன. இதன் விளைவாக இவ்வாய்வானது கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு தேவைப்பாட்டினையும் எடுத்துக்காட்டுகின்றது. இதற்கமையவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே சமூக மற்றும் பொருளாதார மாற்றங்கள் நகர, கிராமங்களில் திட்டமிடல், ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை விருத்தியில் தாக்கம் செலுத்தும். இப்பொருளாதார, சமூக மாற்றங்கள்

பல்துறைகளின் ஒன்றிணைப்புடன் ஒத்துழைக்கின்றன. ஒரு நிறுவனம் அல்லது ஒரு பிரிவினர் சுதந்திரமாகவும் இணைந்தும் செயல்படுவது பொது, தனியார் மற்றும் இலாப நோக்கமற்ற துறைகளிடையே தேவைப்பாடாகவுள்ளது. இது சர்வதேச ரீதியாகவும் நிகழ்த்தப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே நாட்டு பொருளாதார வளர்ச்சியை தூண்டும் வகையில் இதனை ஆய்வு செய்வது முக்கிய தேவைபாடாகவுமுள்ளது. இதன் மூலம் பல்துறைகளிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி ஒன்றிணைவிற்கு வழிவகுத்தலுடன் பொருளாதார வளர்ச்சியையும் இலகுவாக எய்த முடியுமாகும். எனவே தான் இவ்வாய்வானது 'பல்துறைகளின் ஒன்றிணைவும் பொருளாதார வளர்ச்சியும் 1987 முதல் 2017 வரையிலான இலங்கையை மையப்படுத்திய ஓர் ஆய்வு' எனும் தலைபபின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப்பிரச்சினை**

ஆய்வின் பிரதான பிரச்சினையாக ''பல்வேறு துறைகள் இருக்கின்ற போதிலும் அவற்றுக்கிடையே ஒன்றிணைவு, ஒத்துழைப்பு அதிகளவில் காணப்படாமை'' என்பதுவே ஆய்வின் பிரச்சினையாகும். இவற்றோடு மேலதிகமாக இத்துறைகளிடையே வேறுபட்ட பண்பாடுகள், செயற்றிறன் என்பன இருக்கின்றமையும் ஒரு பிரச்சினையாக அடையாளப்படுத்த முடியும். 'வெவ்வேறு துறைகள், மக்களிடையே மனித வளம் மற்றும் பண்பாடு, அரசியல் பயன்பாடு கணிசமான வேறுபாடுகளை கொண்டுள்ளது (போல்மன் மற்றும் டெரர்ன்ஸ், 1991). இக்கருத்தின் மூலம் வேறுபட்ட நிலையினைக் காணலாம். அத்துடன் இப்பல்துறைகளின் ஒன்றிணைவில் பல தடைகள் காணப்படுகின்றமை என்பன போன்றன பிரச்சினைகளாக அடையாளப்படுத்த கூடியதாக இருக்கின்றன. எனவே இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கும் பொருட்டே இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

பிரதான நோக்கம்

பொருளாதார வளர்ச்சியில் பல்துறைகளின் ஒன்றிணைவின் முக்கியத்துவத்தினை ஆராய்வதும் அவற்றிடையே ஒன்றிணைவினை ஏற்படுத்தும் பொருட்டு (பொது, தனியார், இலாபமற்ற துறைகள்) அதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமாகும். தீர்வுகளை கொண்டு இன்று இலங்கை முகங்கொடுக்கும் பல்துறைகளின் ஒன்றிணைவின்மையை நீக்குதல்.

துணை நோக்கம்

1. துறை சார் பங்களிப்புக்களை அறிதல்.

2. பொருளாதார வளர்ச்சியில் மனித வள அபிவிருத்திச் சுட்டெண் (Human Development Index), சொத்துரிமைச் சுட்டெண் (Property Rights Index), குடிசார் உரிமைச் சுட்டெண் (Civil Liberties Index) மற்றும் நிதிச்சுதந்திரச் சுட்டெண் (Financial Freedom Index) என்பவற்றின் பங்களிப்பினை அறிதல்.

3. பல்துறைகளின் ஒன்றிணைவில் தாக்கம் செலுத்தும் காரணிகள் ஆராய்தல்.

4. பொருளாதார வளர்ச்சிக்கான பிராந்திய அணுகுமுறையை உருவாக்குதலுடன் ஒன்றிணைவு மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல்.

**ஆய்வுப்பிரதேசம்**

இவ்வாய்வானது இலங்கையை மையப்படுத்திய ஓர் ஆய்வாகும். இலங்கையை பொறுத்தமட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றதொரு தீவாகும். 9 மாகாணங்களையும் 25

அரசசேவை மாவட்டங்களையும் 65610 சதுர கிலோ மீற்றரக்ளையும் கொண்ட நாடாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி 2017 இன் படி 11,906,752 மில்லியனைக் கொண்டுள்ளது. இலங்கையானது ஆரம்பம் தொட்டு யானைத்தந்தம், முத்துக்கள், நவரத்தினங்கள் போன்றவற்றிற்கு பெயர் போனதுடன் குடியேற்ற காலத்தில் கறுவா, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களுக்கு பெயர் பெற்று விளங்கியது. 1948 சுதந்திரத்தின் பின் முதலாளித்துவ பொருளாதாரத்தினை ஆரம்பத்தில் சிறிது காலம் பின்பற்றிய போதிலும் ஆசியாவில் மிக முன்னேற்றகரமான சமூகநல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. 1956இல் சமவுடைமைப் பொருளாதாரத்தினையும் 1977 இன் பின் தனியார்மயப்படுத்தலில் ஈடுபட்டுள்ளதுடன் சந்தைப் பொருளாதார கொள்கையையும் ஏற்றுமதி சார் வர்த்தகத்தினையும் நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது அதி இயங்குநிலையில் உள்ள துறைகளாக தொலைத்தொடர்பு, வங்கித்துறை மற்றும் சுற்றலாத் துறை என்பன காணப்படுகின்ற அதே நேரம் இத்துறைகள் இடையே ஒருங்கிணைப்பு வேண்டப்படுகின்றதனையும் காணலாம்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி 1990களில் சராசரியாக 5.5 வீதம் ஆண்டு வளர்ச்சியை பெற்றது. வறட்சியும், சீர்கெட்டுவந்த பாதுகாப்பு நிலையும் 1996 இல் 3.8 வீதத்துக்கு தாழ்த்தும் வரை நீடித்தது. 1997-2000 வரையான காலப்பகுதியில் சராசரியாக 5.3 வீத வளர்ச்சியோடு கூடிய பொருளாதார மீட்சி காணப்பட்டதெனினும் வரவு செலவு பற்றாக்குறை, தொடர்ந்த உள்நாட்டு குழப்பங்கள் மற்றும் பல்துறைகளின் ஒன்றிணைவின்மை என்பன காரணமாக 2001களில் வரலாற்றில் முதன்முறையாக பொருளாதார ஒடுக்கத்தை காண நேர்ந்தது. இதற்கு பிற்பட்ட காலங்களில் ஏற்பட்ட காலாகால ஆட்சிமாற்றம், அபிவிருத்திக்கொள்கைகள் என்பன பொருளாதாரத்தினை இடைப்பட்ட நிலையில் வைத்திருந்தமையை காணலாம்.

எனவே இத்தகு நிலையை கொண்டுள்ள இலங்கையை பல்துறைகளின் ஒன்றிணைவினை மேற்கொள்ளச் செய்வதுடாக பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு இலங்கையை மையப்படுத்தியதாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு வரையறை

இவ்வாய்வில் இலங்கையில் பயன்படுத்தப்படும் சில சுட்டெண்கள் தொடர்பான தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை 1987-2017 வரையாகவுள்ள முப்பது வருட காலம் வரையினதாகும். இரண்டாம் நிலைத்தரவுகளைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் இத்தரவுகளில் வழுக்கள் காணப்படலாம். அவ்வழுக்கள் ஆய்விலும் தாக்கம் செலுத்தலாம். ஆய்வுக்காக பயன்பட்டுள்ள சாரா மாறிகள் பெறுமதி சிறியதாகவும் சார்ந்த மாறியானது பெறுமதி பெரியதாகவும் காணப்படுகின்றமையால் மாதிரியை பொருத்துவதில் கடின நிலையொன்று தோன்றியது. மேலும் சுட்டெண்கள் தொடர்பான தரவுகள் முற்பட்ட காலங்களில் பரவலாக கிடைக்கப்பெறாமையின் காரணமாக அதனை கணித செய்கைகள் மூலம் அதற்கான சமன்பாடுகளைக்கொண்டு கண்டறிய வேண்டியதொரு நிலைமை காணப்பட்டது. அத்துடன் தரவுகள் அனைத்தும் கிடைப்பதிலும் சில தடைகள் தோன்றியமையானது ஆய்வின் வரையறையாக குறிப்பிட்டுக்காட்ட முடியுமாகின்றது.

## தரவு சேகரிப்பும் ஆய்வு முறையியலும்

தரவு சேகரிப்பு முறை

ஆய்வின் நோக்கத்தினை அடையும் முகமாக தரவு சேகரிப்பிற்காக வேண்டி இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு மூலகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்விற்காக வேண்டி எண்ணளவை முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறையாக இங்கு எண் ரீதியான தரவுகள் பெறப்பட்டுள்ளன. இதற்காக மத்திய வங்கி ஆண்டறிக்கைகளையும் அதோடு இணைந்து இணையதளம், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் குறிப்புக்கள் என்பனவும் தரவு மூலங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

தரவு பகுப்பாய்வு முறை

இவ்வாய்வானது 1987-2017 வரையிலான காலத்தொடர் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு $Y= \beta_0+ \beta_1X_1+ \beta_2X_2+ \beta_3X_3+ \beta_4X_4+U$ எனும் பிற்செலவு மாதிரியின் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் (Minitab, Ms-excel) என்பவற்றின் உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வுத்தரவுகளானது 1987 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 30 வருட காலங்களுக்குரியதாகும். இவ்வாய்வானது பல்துறைகள் சார்ந்த ஆய்வாயினும் சுட்டெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. இங்கு பல்துறைகளின் ஒன்றிணைவும் பொருளாதார வளர்ச்சியும் என்ற ஆய்வுத்தலைப்பினைக் கொண்டு பல்துறைகளின் ஒன்றிணைவு பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனவும் இதற்காக பல்துறைகளை ஒன்றிணைக்கும் காரணிகளை கண்டறியவும் இவ்வாய்வானது முற்பட்டுள்ளது

**அளவுசார் அனுகுமுறைகள்**

***a. கருவி 1***

***அட்டவணை 1 மாதிரியுருவைத் தெரிவு செய்தல் (1987-2017)***

| மாதிரி | $R^2$ | F(VALUE) | P | D.W | VIF | $R^2$(Adj) |
|---|---|---|---|---|---|---|
| $GDP=\beta_0+\beta_1HDI+\beta_2PRI+\beta_3CLI+\beta_4FFI+U$ | 80.2% | 26.35 | 0.000 | 1.37 | 1-5.49 | 77.2% |
| $GDP=\beta_0+\beta_1logHDI+\beta_2logPRI+\beta_3logCLI+\beta_4logFFI+U$ | 82.8% | 7.20 | 0.018 | 1.31 | 1-1.60 | 71.3% |
| $logGDP=\beta_0+\beta_1HDI+\beta_2PRI+\beta_3CLI+\beta_4FFI+U$ | 80.1% | 26.11 | 0.000 | 1.16 | 1-5.49 | 77.0% |
| $logGDP=\beta_0+\beta_1logHDI+\beta_2logPRI+\beta_3logCLI+\beta_4logFFI+U$ | 86.3% | 9.48 | 0.009 | 1.56 | 1-1.0 | 77.2% |

கணிப்பிடப்பட்டவை (2018)

*அட்டவணை 2 பிற்செலவு ஆய்வின் பெறுகைகள் (1987-2017)*

| மாறிகள் | பிற்செலவு குணகம் | t பெறுமானம் | நிகழ்தகவு |
|---|---|---|---|
| நிலையானது | -19725243 | - 4.38 | 0.000* |
| மனித அபிவிருத்திச் சுட்டெண்(HDI) | 4545739 | 0.86 | 0.400 ns |
| சொத்துரிமைச் சுட்டெண்(PRI) | - 9401 | - 0.48 | 0.636 ns |
| குடிசார் உரிமைச் சுட்டெண்(CLI) | 4627916 | 10.16 | 0.000* |
| நிதிச்சுதந்திரச் சுட்டெண்(FFI) | 95821 | 2.15 | 0.041** |


கணிப்பிடப்பட்டவை (2018)

* 1% மட்டத்தில் பொருளுண்மை வாய்ந்தது

** 5% மட்டத்தில் பொருளுண்மை வாய்ந்தது

ns பொருளுண்மை அற்றது

நேர்கோட்டு நேர்கோட்டு மாதிரியின் சிதறல் வரைபடம்




வரைபடம் 1: Residuals vs Fits for GDP

## பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும் (DISCUSSION AND RESULTS)

பல்துறைகளின் ஒன்றிணைவினை ஏற்படுத்தும் காரணிகளை அடையாளப்படுத்தல் என்ற பிரதான நோக்கத்தினை அடைந்து கொள்ள மற்றும் உப நோக்கங்களான துறைசார் பங்களிப்புகளை அறிதல், பொருளாதார வளர்ச்சியில் மேற்படி சுட்டெண்களின் பங்களிப்பினை அறிதல், நீண்டகால பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான பிராந்திய அணுகுமுறையை உருவாக்குதலுடன் இவற்றினை சரிவர அடைதல் போன்றவற்றினை மதிப்பீடு செய்கின்றது.

மாறிகள்

சார்ந்த மாறியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியும் சாரா மாறிகளாக இங்கு மனித வள அபிவிருத்திச் சுட்டெண், சொத்துரிமைச் சுட்டெண், குடிசார் உரிமைச் சுட்டெண் மற்றும் நிதிச்சுதந்திரச் சுட்டெண் என்பன மாறிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவுகள் மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், மத்திய வங்கியின் இலங்கைப் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விபரங்கள், புள்ளி விபரவியல் நூல்கள் மற்றும் இணையதளங்கள் ஆகிய மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. இத்தரவுகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா மில்லியனிலும் சுட்டெண்களானது அது இயல்பாக அமையும் வகையிலும் எடுத்துக் கொளள்ப்படுகின்றன. அத்துடன் இங்கு சுட்டெண்களானவையின் சில தரவுகளானது பின்வரும் சமன்பாடு மூலம் பெறப்பட்டுள்ளமையானது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்தவகையில் மனித வள அபிவிருத்திச் சுட்டெண்ணினைக் கணிப்பதற்காக $Yt = 0.6839 + 0.00160*t$ என்ற சமன்பாடும் சொத்துரிமைச் சுட்டெண்ணினைக் கணிப்பதற்காக $Yt = 60.61 - 1.88811*t$ என்ற சமன்பாடும் குடிசார் உரிமைச் சுட்டெண்ணினைக் கணிப்பதற்காக $Yt = 3.409 + 0.0524*t$ என்ற சமன்பாடும் நிதிச்சுதந்திரச் சுட்டெண்ணைக் கணிப்பதற்காக $Yt = 48.03 - 0.979021*t$ என்ற சமன்பாடும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தரவுகள் குறுக்குவெட்டுத் தரவுகளாகும் (CROSS SECTIONAL DATA). பொதுவாக இத்தரவுகள் தொடர்ச்சியாக பல ஆண்டுகளுக்கு உரியனவாகவுள்ள காலத்தொடர் வரிசைத்தரவுகளாகும் (TIME SERIES DATA). இத்தரவுகள் Minitab மற்றும் Ms-excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

3.2 பொருத்தமான மாதிரியுருவைத் தெரிவு செய்தல்

இலங்கையில் பல்துறைகளின் ஒன்றிணைவும் பொருளாதார வளர்ச்சியும் என்ற இவ்வாய்வில் குடிசார் உரிமைச் சுட்டெண்(CLI) மற்றும் நிதிச்சுதந்திரச் சுட்டெண் (FFI) ஆகிய மாறிகள் முக்கிய காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட இம்மாறிகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையேயுள்ள தொடர்புகளை கண்டு கொள்வதற்கு பிற்செலவு மாதிரி உருக்களில் (Multiple regression models) மிகச்சிறந்த முறையாக, மாதிரியாக இங்கு நேர்கோட்டு நேர்கோட்டு மாதிரியுருவை தெரிவு செய்வதற்கு பல்வேறு புள்ளிவிபரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு சுட்டெண்களானது சாதாரண சிறிய பெறுமானங்களாகவும் மொத்த தேசிய உற்பத்தியானது பெரிய பெறுமானங்களாகவும் இடம் பெறுகிறது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு Minitab மற்றும் Ms- excel உதவிகள் பெறப்பட்டுள்ளன.

நேர்கோட்டு நேர்கோட்டு மாதிரியுருவில் துணிவுக்குணகத்தின் பெறுமானம் (R2) 80.2 வீதமாகவும் F இன் பெறுமானம் 26.35 ஆகவும் மாறற்றிறன் பெருக்கக் காரணி (VIF) 1-5.49 இற்குமிடையிலும் காணப்படுகிறது. (Durbin-Watson statistic = 1.37082) டேவின் வொட்சன் (D.W) புள்ளிவிபரத்தின் படி ஐந்து வீத பொருளுண்மை மட்டத்தில் தீர்மானம் எடுக்க முடியாத பகுதியில் ($DL=1.14< D.W > DU=1.74$) 1.370 எனக் காணப்படுவதினால் வழு அவதானங்களுக்கிடையில் தன்னிணைவுப் பிரச்சினை காணப்படுகின்றதா என்பது பற்றிய தீர்மானத்திற்கு வர முடியாதுள்ளது. எனவே டேவின் வொட்சன் (D.W) புள்ளிவிபரத்தின் படி

வழு அவதானங்களுக்கிடையில் தன்னிணைவுப் பிரச்சினை எதுவும் காணப்படவில்லை என தீர்மானம் கொள்ளப்படுகிறது.

மேற்படி பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பல்துறைகளின் ஒன்றிணைவு தொடர்பில் நேர்கோட்டு நேர்கோட்டு மாதிரியுருவின் முழுதளவிலான சோதனை 1987-2017 வரையேயுள்ள காலத்தில் $P(F \geq 26.35)$ 0.000 தொடர்பான கருதுகோள் மறுக்கப்படுவதாலும் இவ்வாய்வு தொடர்பில் நேர்கோட்டு நேர்கோட்டு மாதிரியுரு போதுமானதாகவுள்ளது. எனவே இங்கு நேர்கோட்டு நேர்கோட்டு மாதிரியுருவே ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மாறிகளில் நிதிச்சுதந்திரச் சுட்டெண் (FFI) 95 சதவீத நம்பிக்கை மட்டத்தில் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்தோடு இங்கு குடிசார் உரிமைச் சுட்டெண்(CLI) 99 சதவீத நம்பிக்கை மட்டத்தில் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றதுடன் சொத்துரிமைச் சுட்டெண் (PRI) மற்றும் மனித அபிவிருத்திச் சுட்டெண் (HDI) இங்கு பொருளுண்மை அற்றதாக இருக்கின்றன. மனித அபிவிருத்திச்சுட்டெண் தரவுகளானது தொடர்ச்சியான காலப்போக்கில் ஒரே பெறுமதியைக் காட்டுகிறது. எனவே தான் இங்கு செல்வாக்குச் செலுத்துவதாக காணப்படவில்லை.

சொத்துரிமைச் சுட்டெண்ணும் (PRI) பொருளுண்மை அற்றதாக இருப்பதனைக் காணலாம். ஏனெனில் இங்கு இதன் தரவுகளானது அதிகமாக மறைப்பெறுமதியைக் கொண்டமைகின்றதுடன் இதுவும் தொடர்ச்சியாக ஒரே பெறுமதியைக் காட்டுகிறது. எனவே தான் ஆய்வில் பொருளுண்மையற்றதாக இருக்கின்றது.

குடிசார் உரிமைச் சுட்டெண் (CLI) ஆனது ஒரு சதவீதத்தால் அதிகரிக்கும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 4627916 ரூபா மில்லியனால் அதிகரிக்கின்றதுடன் நிதிச்சுதந்திரச் சுட்டெண்(FFI) ஆனது ஒரு சதவீதத்தால் அதிகரிக்கும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 95821 ரூபா மில்லியனால் அதிகரிக்கின்றது. இங்கு குடிசார் உரிமைச் சுட்டெண் (CLI), நிதிச்சுதந்திரச் சுட்டெண்(FFI) என்பன நேர்ப்பெறுமதியைக் காட்டி நிற்கின்றன.

எனவே இலங்கை தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்காக குடிசார் உரிமைச் சுட்டெண் (CLI), நிதிச்சுதந்திரச் சுட்டெண் (FFI) போன்றன மீது மென்மேலும் தூண்டுதலைச் செய்ய முயற்சிகளை மேற்கொளள் வேண்டும். இதன் விளைவாக சரியானதொரு நிலைப்பாட்டினை பல்துறைகளினை வைத்து சீர்படுத்தவும் சமனிலைப்படுத்தவும் பல்துறைகளின் ஒன்றிணைவினை அதிகரிக்கும் வகையில் பொருளாதார கொள்கையினை மறுசீரமைக்கவும் முடியுமாகும். எனவே பல்துறைகளின் ஒன்றிணைவினை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ள முடியுமாகும்.

**முடிவுரை**

ஆய்வு முடிவாக பல்துறைகளின் ஒன்றிணைவு அதிகளவில் காணப்படாமை எனும் பிரச்சினைக்கு தீர்வுகளை முன்வைப்பதாக அமைகிறது. அதன்படி இங்கு பல்துறைகளுக்கிடையே எவ்வாறு மேம்பட்ட ஒன்றிணைவினை ஏற்படுத்தலாம் எத்தகைய காரணிகள் மூலம் அதனை சாதிக்கலாம் என்பதனை இங்கு விளக்குவதாக அமைகிறது.

இவ்வாய்வினது பிரதான நோக்கங்களான, பொருளாதார வளர்ச்சியில் பல்துறைகளின் ஒன்றிணைவின் முக்கியத்துவத்தினை ஆராய்வது மற்றும் அவற்றிடையே ஒன்றிணைவினை ஏற்படுத்தும் பொருட்டு (பொது, தனியார், இலாபமற்ற துறைகள்) அதற்கான தீர்வுகளை முன்வைப்பது ஆகியவற்றுடன் துணை நோக்கங்களான துறை சார் பங்களிப்புக்களை அறிதல், பொருளாதார வளர்ச்சியில் மனித வள அபிவிருத்திச் சுட்டெண், சொத்துரிமைச் சுட்டெண், சமூக தனியுரிமைச் சுட்டெண் மற்றும் நிதிச்சுதந்திரச் சுட்டெண் என்பவற்றின்

பங்களிப்பினை அறிதல் மற்றும் பல்துறைகளின் ஒன்றிணைவில் தாக்கம் செலுத்தும் காரணிகள் ஆராய்தல் போன்றன இவ்வாய்வினூடாக அடையப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், மத்திய வங்கித்தரவுகள், புள்ளிவிபரவியல் தரவுகள் சார் நூல்கள், இணையத்தளம் என்பன தரவு மூலங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. 1987-2017 வரையான காலத்தொடர் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தரவுகளை மதிப்பீடு செய்ய 'பிற்செலவு ஆய்வு'(REGRESSION MODEL) பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஆய்விற்காகவும் ஆய்வினை நிரூபிப்பதற்காகவும் சேகரிக்கப்பட்ட தரவுகள் Minitab மற்றும் Ms-excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் செலுத்துகின்ற பல்துறை ஒன்றிணைவுக் காரணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய இங்கு பல்துறைகளின் ஒன்றிணைவில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக சுட்டெண்கள் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட அதன் உள்ளடக்க காரணிகள் இங்கு செல்வாக்குச் செலுத்துவதாக அமைகிறது. அதன்படி இங்கு குடிசார் உரிமைச் சுட்டெண் பல்துறைகளின் ஒன்றிணைவில் தாக்கம் செலுத்தும் ஒரு காரணியாக அடையாளப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் இங்கு குடிசார் வளமானது ஒரு இயங்கும், இயக்கும் சக்தியாக இருப்பதாலும் ஒவ்வொரு துறைகளிலும் குடிமக்கள் வளமானது தவிர்க்க முடியாத ஒன்றாகவும் இருக்கிறது. எனவே இங்கு குடிசார் வளம் சரியாக பயன்படுத்தப்பட்டு அதற்கான சரியான ஊக்குவிப்புக்கள் வழங்குவதுடாக குடிசார் உரிமைச் சுட்டெண்ணை அதிகரிக்கலாம். இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.

மேலும் மனித வளத்திற்கான பாதுகாப்பு உரிமைகள் அதனது பாதுகாப்பு என்பன சரியாக கொடுக்கப்படும் போது மனித வளமானது தனது ஆற்றல், திறன்களை மென்மேலும் வளர்த்துக் கொள்ள முடிவதுடன் அதன் விளைவான மனித வளமானது அதிகரிக்கப்படுகிறது. இதனால் உற்பத்தியாற்றல், வினைத்திறனாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் என்பன அதிகரிக்கப்படுகிறது. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். ஆகவே குடிசார் உரிமைச் சுட்டெண்ணும் முக்கியமானதொரு காரணியாகும்.

நிதிச்சுதந்திரச் சுட்டெண்ணானது பல்துறைகளின் ஒன்றிணைவில் தாக்கம் செலுத்தும் ஒரு காரணியாக உள்ளது. அதாவது நிதிச்சுதந்திரமானது சுயமாக நிறுவனங்களின் இடையே வழங்கப்படல் வேண்டும் என்பதோடு இங்கு நிறுவனங்கள் தமது உற்பத்தி, செயலாற்றம் மற்றும் வினைத்திறன் என்பவற்றினை அதிகரிக்க நிதியானது போதுமானதாக கிடைக்கப் பெறக்கூடியதாக இருக்கும் போதே அதனது அடைவினை அவை பெற்றுக் கொள்கின்றன. எனவே இங்கு துறைகளது நிதிச்சுதந்திரமானது அதிகரிக்கும் போது நிறுவனங்களின் வளர்ச்சியானது அதிகரிக்கப்படுகிறது. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். எனவே இங்கு நிதிச்சுதந்திரச் சுட்டெண்ணும் முக்கிய பல்துறை ஒன்றிணைவுக் காரணியாகும்.

எனவே மொத்தமாக நோக்கும் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பல்துறைகளின் ஒன்றிணைவினை ஏற்படுத்தும் பொருட்டு சீரான, செயற்றிறன் வாய்ந்த நீண்ட கால கொள்கை அமுலாக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இதன்படி இங்கு முன்வைக்கப்படும் விடயங்களைக் கொண்டு பல்துறைகளின் ஒன்றிணைவினை அதிகரிக்கலாம்.

## பரிந்துரைகள்

பல்துறைகளின் ஒன்றிணைவும் பொருளாதார வளர்ச்சியும் எனும் இவ்வாய்வானது மேற்குறிப்பிட்ட பல்வேறு சான்றுகள் மற்றும் பகுப்பாய்வு என்பன ஊடாக பல்துறைகளின் ஒன்றிணைவு முக்கியத்துவத்தினையும் அது பொருளாதார வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனையும் முன்வைக்கின்றது. அதனடிப்படையில் பல்வேறு துறைகள்

(பொது, தனியார், இலாபமற்ற துறை) காணப்படுகின்ற போதிலும் அவற்றிடையே இன்று ஒன்றிணைவு அதிகளவில் காணப்படாமையானது மிக இலகுவாக எம்மால் அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையானது பொருளாதார பின்னடைவினை எதிர்நோக்கி வருகின்றமையால் இலங்கையில் பல்துறைகள் (அரச, தனியார், இலாபமற்ற துறைகள்) ஒன்றிணைந்து செயலாற்றும் பங்கினை அதிகரித்துக் கொள்ள அதற்கான வழிவகைகளை ஆராய்கின்ற இவ்வாய்வினில் பல்துறைகளின் ஒன்றிணைவினை அதிகரிக்கும் காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்தவகையில் பொருளாதார வளர்ச்சியையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படச் செய்வதில் இக்காரணிகள் முக்கிய பங்காற்றுவதாக அமைகிறது. எனவே பல்துறைகளின் ஒன்றிணைவினை ஏற்படுத்தும் வகையில் பின்வருமாறு சில பரிந்துரைகளை முன்வைக்கலாம். அந்தவகையில் பல்துறைகளின் ஒன்றிணைவிலும் பொருளாதார வளர்ச்சியிலும் பின்வரும் காரணிகள் பிரதான தாக்கம் செலுத்துகின்றன. சூழல் மற்றும் உந்துதல் (நிறுவனங்கள் ஒன்றிணையும் காரணிகள்), தலைமைத்துவம் (சமூக செல்வாக்கில் அணுகுமுறை மற்றும் செயல்முறை என்பவற்றில் கூட்டு முயற்சி, மற்றவர்களது ஆதரவினை பெறுவதற்கான சாதனம்), அமைப்பு (முறைசார், முறைசாரா கட்டமைப்புக்கள் மற்றும் அமைப்புகளுக்கு உதவுதல்), வளங்கள் (நிதி மற்றும் ஊழியர்களை குறிக்கும்), ஆளுமை (கூட்டு முயற்சியில் கட்டுப்பாட்டுடன் கூடிய சிக்கல்களை கையாள்வதற்கான நடைமுறை), நம்பிக்கை (தனி நபர், நிறுவனம் ஒவ்வொருவரிடமும் காணப்பட வேண்டும்.

மேலும் கூட்டு விருப்பம் (சுய முடிவுகள் எடுக்காமல் ஒன்றிணைதல்), ஆபத்து (இழப்புக்கள் வரும் போது அதனை எதிர் கொள்ளும் திறமை), அதிகாரமளித்தல் (நிறைவேற்றுதலுக்கான உறுதி), தகவல்கள் மற்றும் சான்றுகள் (அறிவும் உண்மையும்), கண்காணிப்பு (முன்னேற்றத்திற்கான கட்டமைப்பு மாற்றங்கள்), நிறுவன திறன், பொதுவான புரிந்துணர்வு என்பவற்றினை குறிப்பிடலாம்.

அத்துடன் பின்வரும் காரணிகளும் பல்துறைகளின் ஒன்றிணைவுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஏதுவாக அமைகிறது. பல்துறைகளிடையே முறையான ஒப்பந்தங்கள் ஒவ்வொரு மட்டத்திலும் தெளிவாகவும் பொறுப்புக்களுடனும் இருத்தல் வேண்டும், ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் சேவைகள் வழங்கல் மற்றும் கூட்டுப்பண்புகள், வலைபின்னல் ஊக்குவிப்புடன் ஒரு நிறுவன கலாசார ஒன்றிணைவினை உருவாக்க வேண்டும்.

எனவே இவற்றினை வைத்து நோக்கும் போது பின்வரும் சில காரணிகள் மிக முக்கிய தாக்கம் செலுத்தும் காரணியாக இருப்பதால் பல்துறைகளின் ஒன்றிணைப்பில் பெரும் செல்வாக்கினை செய்ய முடியும் என்பதனை ஆய்வு முடிவாக குறிப்பிட்டுக் காட்டலாம். தலைமைத்துவம் மிக முக்கிய அம்சங்களுள் ஒன்றாகும். தலைமைத்துவம் எனும் போது பல்துறைகளின் வெற்றிக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இது காணப்படுகின்றது. இது பல்துறைகளிடையேயும் வித்தியாசமானவாறு இடம்பெறுகின்றது. இத்தலைமைத்துவமானது எல்லோரையும் ஓர் ஒத்துழைப்பின் கீழ் கொண்டுவரும் ஒரு செயற்பாடாகும்(Bryson & Crosby,1992) மற்றும் (Chrislip & Larson, 1994). எனவே இதற்கமைய தலைமைத்துவம் சரியாக இடம்பெறுமாயின் பல்துறைகளானது சரியான ஒன்றிணைவுடன் இயங்கும். இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அடைய முடிகின்றது.

தகவலும் சான்றுகளும் என்பதனைப் பொறுத்தவரையில் தகவலும் சான்றுகளும் எனும் போது தீர்மானம், கலந்துரையாடல்களின் முக்கிய ஆரம்ப புள்ளியாக இது இருக்கும். எனவே இது எதிர்பார்ப்பினை தூண்டும் வகையிலான செயற்பாடாகும். நல்ல தகவல்களின் மூலம் துல்லியமான நல்ல முடிவுகள் பெற துணையாக நிற்கும். இதன் மூலம் கிடைக்கும் வெளியீடுகளானது ஏற்கனவே அறியக்கூடியதாக இருக்கும். Gray என்பவரின் ஆய்வின்படி தகவலும் சான்றுகளும் பிரச்சினையின் வன்மைத் தன்மையை அறியவும் அதன் மூலம் சரியான முடிவுகள் பெறவும் துணையாக நிற்கும் என்கிறார். அத்துடன் வீண் கலவரங்களையும் விட்டும் இது தூரமாக்கும் (Gray, 1989).

அமைப்பும் ஊக்குவித்தலும். இது பிராந்திய அபிவிருத்தி நிறுவனங்களிடையே முக்கியதொரு பங்கினை வகிக்கின்றது. குறித்த இலக்குகளை நோக்கி நகரச்செய்யும் ஒரு காரணியாக அமைவதோடு அதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து முன்னேற்றகரமான செயற்பாடுகளை செய்யவும் துணை செய்யும். இது துறைகளின் ஒன்றிணைவினையும் புதிய துறைகளின் ஊக்குவிப்பிற்கும் சாதகமாக அமையும் (Huxham & Vangen , 2000) மற்றும் (Oliver, 1990).

வளங்கள் எனும் போது இது பல்துறைகளின் ஒன்றிணைவில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. இது மூலதனம், வெளியுதவிகள் மற்றும் நிதிவளங்கள் என்பவற்றினை உள்ளடக்கியதாகும். எனவே இவற்றினை பல்துறைகளினிடையே பகிர்ந்து செயற்படுவதன் மூலம் சிறந்த பயனை பெற முடியுமாகின்றது (Bryson & Crosby, 1982).

கட்டமைப்பு என்பது பிராந்திய அபிவிருத்தி நிறுவனங்களிடையே முறையான, முறைசாரா கட்டமைப்பு நடவடிக்கைகளை குறிக்கின்றது. இதில் அபிவிருத்தித்திட்டங்கள், செயற்பாடுகள் பல்துறைகளிடையே மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுவதோடு இவை பல்துறைகளிடையே சமமான போக்கினை நிலைத்திருக்கவும் செய்கிறது (Gray, 1989).

பொதுவான புரிந்துணர்வு என்பதும் இங்கு நோக்கத்தகு விடயமாகும். பொதுவான புரிந்துணர்வு எனும் போது கலந்துரையாடல்கள் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் பல்துறைகளிடையே ஒன்றிணைவினை ஏற்படுத்தலாம் (Kikoski, 2004). ஒத்துழைப்பு மனப்பாங்கும் முக்கியமான காரணியாகும். ஒத்துழைப்பு மனப்பாங்கு எனும் போது தனிப்பட்ட முடிவுகள் பெறாது ஒன்றிணைந்து கலந்தாலோசித்து முடிவுகள் பெற வேண்டும். இதன் மூலம் பல்துறைகளிடையே ஒன்றிணைவினை ஏற்படுத்தலாம் (Simonin, 1997).

நம்பிக்கையை பொறுத்தமட்டில் நம்பிக்கை எனும் போது ஒவ்வொரு நிறுவன தனிநபருக்குமிடையே இது காணப்படும். இது திட்டங்களின் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் (Vandevan & Walker, 1984) மற்றும் (Huxham & Vanger. 2000).

மேலும் கூட்டுப்பொறுப்பு என்பது கொள்கை அமைப்பு, வழிகாட்டல்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பன சமுதாய ஈடுபாடு துறைகளின் மேலோங்கிய பங்களிப்பு என்பன கூட்டுப்பொறுப்பாக நிறைவேற்றும் போது சேவைத்திட்டம் இலகுவாக நடைமுறைபடுத்தப்படவே பொருளாதார வளர்ச்சி ஏற்படும். அதிகாரமும் முடிவெடுத்தலும் எனும் போது ஆலோசனைகள் துறைகளிடையே கலந்துரையாடப்பட்டு கருத்தொற்றுமையைப் பேணி முடிவுகள் பெறப்படல் வேண்டும். பக்கச்சார்பின்றி முடிவுகள் பெறப்படவே திருப்தி நிலையானது அதிகரிக்கும். வரையறுப்பு என்பது ஒவ்வொரு துறைக்கும் அதில் ஈடுபடும் ஒவ்வொரு தனிநபருக்கும் தத்தமது பொறுப்புக்கள் கடட்ளைகள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் என்பதனை குறித்து நிற்கின்றது. பாதுகாப்பு எனும் போது ஒவ்வொரு துறைக்குமிடையே பாதுகாப்பு உறுதியை பேண வேண்டும். இதற்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும். அதன் மூலம் சிறந்த சேவைகளை வழங்க முடியும். அத்துடன் ஊழல்கள் அற்ற நிலைமையும் பல்துறைகளின் இடையே வேண்டப்படுகின்றது. எனவே மேற்படி விடயத்தினை சரிவர செய்வதுாடாக பல்துறைகளிடையே ஒன்றிணைவினை ஏற்படுத்த முடிவதுடன் அதனோடான பொருளாதார வளரச்சியையும் ஏற்படுத்தலாம்.

மேலும் பல்துறைகளிடையே ஒன்றிணைவினை ஏற்படுத்த வெற்றிகரமான வழிகாட்டல்களாக ஒத்துழைப்புடனும் சிறந்த நடைமுறைகளை பயன்படுத்துவதன் மூலமும் நிலைத்திருக்கும் தலைமை, முடிவெடுத்தல், அறிவு பரிமாற்றம் தொடர்பு மற்றும் வள விநியோகம் போன்றவற்றை பல்துறைகளிடையே ஏற்படுத்தல், உகந்த சேவைகளை வழங்கல், செயற்றிறன், திட்டமிடல் மற்றும் குறிக்கோள் நடவடிக்கைகளை தனிநபர், துறை சார் பங்கேற்பாளர்களை மையப்படுத்தி இலத்திரனியல் மட்டங்களில் நடைபெறச் செய்தல், பயனுள்ள தகவல்கள், வெளிப்பாட்டுத்தன்மை, பொறுப்புணர்வு என்பன நம்பகரமானதாக பல்துறைகளிடையே இடம் பெறல், மொழியியல் ரீதியாக, கலாச்சார ரீதியாக ஒத்துப்போகும் மக்களுக்கு சேவைகளை சரியாக வழங்கல், வலுவான பயிற்சி பெற்ற சிறந்த

தலைமைத்துவத்தினை பேணல், புதிய நிர்வாகத்தினை சந்திக்க முன்னணி நிறுவனங்களுக்கான நிர்வாக ஆலோசனைகள் வழங்கல் மற்றும் உறுதியான நிறுவன நெறிமுறைகளை மேம்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.

எனவே மேற்படி விடயத்தினை சரிவர செய்வதுாடாக பல்துறைகளிடையே ஒன்றிணைவினை ஏற்படுத்த முடிவதுடன் அதனோடான பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்தலாம்.

## கொள்கை அமுலாக்கங்கள்

இலங்கையின் பல்துறைகளின் ஒன்றிணைவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வானது தரவுகளின் பகுப்பாய்வின்படி இலங்கையானது தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு சதவீதத்தினால் அதிகரிக்கும் போது குடிசார் உரிமைச் சுட்டெண் மற்றும் நிதிச்சுதந்திரச் சுட்டெண் என்பன நேர்ப்பெறுமதியை காட்டி நிற்கின்றன. எனவே இலங்கையானது குடிசார் உரிமைச் சுட்டெண் மற்றும் நிதிச்சுதந்திரச் சுட்டெண் போன்றவற்றின் மீது கவனம் செலுத்துவதோடு அதனை ஊக்குவித்து பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்ள முடியுமானவாறு அதில் விருத்திகளை மேற்கொளள் வேண்டும். இதன் மூலமாக பொருளாதார பின்னடைவினை விடுத்தும் பொருளாதார வளரச்சியை அடைய முடியுமாகின்றது.

அத்துடன் அரச மற்றும் தனியார் தொடர்பாக சரியான முறையொன்றை கைக்கொள்வதோடு அதற்கான அதிசிறந்த வழிமுறைகளை கையாள்வதன் மூலம் இலங்கையில் பல்துறைகளின் குறைவான ஒன்றிணைவினை தீர்க்க முடிவதுடன் இதன் மூலமாக பொருளாதார பின்னடைவினை விடுத்தும் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியுமாகின்றது. மேலும் அரச மற்றும் தனியார் கூட்டுப்பொறுப்பு என்பது கொள்கை அமைப்பு, வழிகாட்டல்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பனவற்றோடு சமுதாய ஈடுபாடு துறைகளின் மேலோங்கிய பங்களிப்பு என்பன கூட்டுப்பொறுப்பாக நிறைவேற்றும் போது சேவைத்திட்டம் இலகுவாக நடைமுறைபடுத்தப்படவே பொருளாதார வளர்ச்சி ஏற்படும். எனவே கொள்கை வகுப்பாளரக்ள் இவ்வாய்வின் மூலம் சிறந்ததொரு வழிகாட்டலைப் பெற்று பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாக தம் கொளஃககளை வகுப்பதன் மூலம் சிறந்த பயனைப் பெற்றுக் கொள்ள முடியுமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## முன்னைய ஆய்வுகளின் மீளாய்வுகள்

### சர்வதேச ரீதியான மீளாய்வுகள்

இங்கு இவ்வாய்விற்கிணங்க சர்வதேச ரீதியாக நோக்குவோமேயானால் ஜகார்த்தா உடன்படிக்கை (1997), பல்துறைகளின் ஒன்றிணைவு சார்ந்து கருத்துக்களை முன்வைக்கிறது. இங்கு முக்கியமாக ஜகார்த்தா உடன்படிக்கையானது சில விடயங்களினை ஜகார்த்தா மாநிலத்தை அடிப்படையாகக் கொண்டு முன்வைத்திருப்பதனை காணலாம். இங்கு இவ்வறிக்கையில் கலந்துரையாடல்கள் மூலம் முடிவுகளும் தீர்வுகளும் முன்வைக்கப்பட்டது. அந்தவகையில் இங்கு குறிப்பிடப்பட்ட முக்கியமான விடயமாக சுகாதாரத்துறை மேம்படுத்தலுக்கு துறை சார் பங்களிப்பும் அதன் ஒன்றிணைந்த தன்மைப்போக்கும் கட்டாயமாக வேண்டப்படுகிறது. இங்கு கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட விடயங்களாக குறிப்பிடப்படுவதானது உடல் நல மேம்பாட்டிற்கு கூட்டணி அமைத்து பல்துறைகளும் ஒன்றிணைந்து விரிவாக்க செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும். அத்தோடு சமூக திறன் மற்றும் தனி நபர் திறன் அதிகரிக்கப்பட வேண்டும். பல்துறை ஒன்றிணைவிற்கான புரிந்துணர்வு, நம்பிக்கை மற்றும் நெறிமுறைக் கொள்கைகள் என்பன ஒன்றிணைவிற்கு பலமாக அமைதல் வேண்டும். இவ்வாறு இதனை மேம்படுத்தல் மூலம் நாட்டு செழிப்பு நிலை மற்றும் பொருளாதார முன்னேற்றம் சுமூகமாக இயங்கப்படும் என்ற கருத்துக்களை முன்வைத்துள்ளது.

Williams (2001), ஊட்டச்சத்து மேம்பாட்டுக்கும் அதனை தொடர்ந்தான பொருளாதார வளர்ச்சிக்கும் பல்துறைகளும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். தமது ஆய்வுக்கட்டுரைகளின் மூலமாக இதனை வெளிப்படுத்துகின்றார். இவர் பங்களாதேஷை அடிப்படையாக கொண்டதாக தனது ஆய்வினை முன்வைத்துள்ளார். இவர் இதற்காக நேர்காணல் முறையை பயன்படுத்தியிருக்கின்றமையை ஆய்வுக்கட்டுரை மூலம் விளக்குவதனையும் காணலாம். அத்துடன் இவர் இங்கு முக்கியமாக ஊட்டச்சத்து கொண்ட விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளதுடன் இதற்காக பிராந்திய மற்றும் உள்நாட்டு மட்டங்களிலான பல்துறைகளின் ஒன்றிணைவினை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார். இவரும் பல்துறைகளின் ஒன்றிணைவிற்கான காரணிகள் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்கவில்லை.

ருவாண்டாவினை மையப்படுத்தி சங்கிலித்திட்டம் மூலம் 'பல்துறைகளின் ஒன்றிணைவு மற்றும் ஒத்துழைப்பினை ஏற்படுத்தல்' எனும் தலைப்பில் ஆய்வொன்று இடம் பெற்றுள்ளது. ருவாண்டர்களின் உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைமைகளை மேம்படுத்துவதன் மூலம் தரமான சேவைகள், தயாரிப்புக்களை மேற்கொள்ள முடியும். எனவே தேசிய, பிராந்திய மற்றும் உள்நாட்டுத் துறைகளிடையே பலமான மற்றும் ஒத்துழைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

Armisted (2009), என்பவர் போன்மோத் எனும் பிரதேசத்தினை மையமாக கொண்டு முன்வைத்த ஆய்வொன்றில் குறிப்பிடுவதானது தலைமைத்துவமானது தனிப்பட்ட நபரின் பண்புகளை குறிக்கும் எனவும் தனி நபர், குழுக்கள் ஒத்துழைப்புடன் இயங்காவிட்டால் தலைமைத்துவம் கேள்விக்குறியாகின்றது என குறிப்பிடுகிறார். எனவே இங்கு தலைமைத்துவத்தினை கட்டியெழுப்புவதற்கும் அதன் மூலமாக ஒரு குடையின் கீழான சமூக உருவாக்கத்திற்கும் அதன் மூலமான ஊழியப்படைக்கும் பல்துறைகள் ஒன்றிணைக்கப்படல் வேண்டும் என குறிப்பிடப்படுகிறது. இவர் இதனை நிரூபிக்க வேண்டி வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானிப்பு போன்ற முதனிலைத்தரவுகளை கையாண்டிருப்பதனைக் காணலாம்.

Bruce (2009), என்பவர் பிராந்திய அபிவிருத்தியில் விவசாயம் பங்கு வகிக்கும் எனவும் இதனை பல்துறைகள் ஒன்றிணைவதன் மூலம் இயக்கப்பாட்டுடையதாகவும் வினைத்தினாகவும் மாற்றுவதன் ஊடாக பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ளலாம் என்ற கருத்தினை முன்வைக்கிறார். இதற்கான மேலதிக அம்சமாக பிராந்திய எல்லைகளை உருவாக்கி, பொருளாதார விருத்திக்கான பிரதேசங்களை உருவாக்கி திட்டமிடல் மேற்கொள்வதூடே நம்பிக்கையை துறைகளினிடையேயும் மக்களிடமும் ஏற்படுத்த வேண்டும் என்று கனடாவினை மையப்படுத்தியதாக தனது ஆய்வினை முன்வைக்கிறார். இதற்காக இவர் நேர்காணல் முறையை தரவு சேகரிப்பு முறையாகக் கொண்டு தனது ஆய்வினை முன்வைத்திருக்கிறார். எனினும் இது தொடர்பான ஆய்வுகள் இலங்கையில் பரவலாக காணப்படவில்லை. எனவே இவ்வாய்விற்கு துணையாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

மேலும் மிசிக்கன் மாநிலத்தினை மையப்படுத்தியதான ஆய்வொன்றில் Hill, Bonnel, Brickx & Smith (2009), இவர்கள் குறிப்பிடும் விடயங்களாவன இவ்வாய்விற்கான தூண்டுதலாக அமைகிறது. இங்கு வளரும் நாடுகளில் விவசாயம், கல்வி, பயிற்சி மற்றும் திறன் என்பவற்றுக்கு பல்துறைகளின் ஒன்றிணைவு உறுதுணையாக இருக்கும் என குறிப்பிடப்படுகிறது. மேலும் இங்கு உலகினில் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தனிப்பட்ட துறைகளுக்கு அப்பால் பல்துறைகளின் ஒன்றிணைந்த முயற்சிகள் அவசியமாகும். இங்கு பல்வேறு துறைகளில் இருந்தும் பங்குபற்றல் மூலம் பொதுவான இலக்கினை அடைய அனைவரும் ஒத்துழைப்பு நல்குவதே பல்துறைகளின் ஒன்றிணைவு என விளக்கப்படுகிறது. இவ்வாய்வில் பெற்ற தீர்மானங்களாக பல்துறைகளின் ஒன்றிணைவு மற்றும் புரிந்துணர்வினை கட்டியெழுப்புவதற்காக அதற்கான வலையமைப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் தொழிநுட்ப விருத்தி, சிக்கல் முன்னுரிமை மற்றும் மூலோபாய திட்டமிடல் என்பன போன்ற செயற்பாடுகள் பல்துறைகளை ஒத்துழைப்புடன் இயங்கச் செய்யும் ஆகிய கருத்துக்கள்

முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான தரவுகளை கலந்துரையாடல் மூலம் இவர்கள் பெற்று தம் ஆய்வினை முன்வைத்திருப்பதனைக் காணலாம்.

பல்துறைகளின் ஒன்றிணைவினை மேற்கொள்வதனூடாக பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் Morries, Adelo & Wills, (2010). இவர்கள் தத்தமது பகுதிகளை கருத்திற்கொண்டு தமது ஆய்வுகளை முன்வைத்திருப்பதனை காணலாம். இங்கு பிரித்தானியாவினை மையப்படுத்திய பல்துறை ஒன்றிணைவும் பொருளாதார அபிவிருத்தியும் என்ற ஆய்வானது Morries (2010), என்பவரால் முன்வைக்கப்பட்ட ஆய்வாகவும் இதில் பல்துறைகளின் போக்கு, அதன் ஒன்றிணைப்பிற்கான வழிகள் குறிப்பிடப்பட்டிருப்பதனையும் காணலாம். இங்கு பிரதானமாக நேர்காணல் முறை மூலம் முதனிலைத்தரவுகள் பெறப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளதுடன் பதினொரு வருட கால தரவுகளுக்கு அமைவாக அனுபவ ரீதியாகவும் இவ்வாய்வானது பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கட்டுரையில் பல்துறைகளின் ஒன்றிணைவால் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி ஏற்படும் விதத்தினை விபரிப்பதாகவும் இதில் பதின் மூன்று காரணிகள் தாக்கம் செலுத்துவதாகவும் அவை எவ்வாறு செயற்படுகின்றதெனவும் எவ்வாறு பொருளாதார அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைகிறது என்பது தொடர்பாகவும் விபரிக்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்தினை மையமாக கொண்டு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தலுக்கு பல்துறைகளிடையே ஒன்றிணைவு அவசியமாகின்றதுடன் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்தலாம். Shihome, சங்கிலித்திட்ட ஆய்வு (2010), ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. Shihome (2010) , எத்தியோப்பியாவில் இரண்டு பிராந்தியங்களை மையப்பகுதியாக கொண்டு உள்நாட்டுத் துறைகளின் ஒன்றிணைவில் எல்லாத்துறைகளும் ஈடுபட வேண்டும் எனினும் இதற்காக இந்நாட்டு மக்களுக்கு ஊட்டச்சத்து அவசியமாகின்றது என்ற கருத்தினை மேம்பட்ட ‘ஊட்டச்சத்துக்கான பல்துறை கூட்டுறவு எத்தியோப்பியாவில் நடைமுறைபடுத்துவதற்கான பிரச்சினை வாய்ப்புக்கள்’ எனும் தலைப்பு மூலம் தரமான அணுகுமுறைகளை நேர்காணல், கண்காணிப்பு ஊடாக தகவல்கள் பெற்று தரவுகள் Nv ivo 10 இல் பகுப்பாய்வும் செய்துள்ளார்.

மேலும் கனடாவினை மையப்படுத்தியதாக Wills, Green & Riley (2010), ஆகியோரது ஆய்வானது பின்வரும் விடயங்களினை குறிப்பிடுகின்றன. அதாவது இங்கு இவர்களது ஆய்வானது முதனிலைத்தரவு சேகரிப்பான கலந்துரையாடல் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இங்கு பொது சுகாதாரத்தில் கூட்டு நடவடிக்கைகள் அவசியம் என்ற விடயத்தினையும் இதற்காக பல்துறைகளினிடையே புதிய நுட்பம், அணுகுமுறைகள் என்பன பேணப்படல் வேண்டும் எனவும் குறிப்பிடுவதனைக் காணலாம்.

Selsky & Perker (2010), ஆகியோர் சியாட்டல் நகரை மையப்படுத்தி முன்வைத்துள்ள ஆய்வொன்றில் குறிப்பிடும் விடயங்களாவன இவ்வாய்விற்கானதொரு வழிகாட்டலாக அமைகிறது. இங்கு நேர்காணல் முறையைக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வின் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் இங்கு இலாப நோக்கற்ற நிறுவனங்கள், அரசு, தனியார் மற்றும் வணிக நிறுவனங்கள் என்பன மூலமாக நிர்வாக சமூக கூட்டுக்கள் உருவாக்கம் பெறுகிறது என குறிப்பிடப்படுகின்றது. பல்துறைகளின் இடையே ஏமாற்றங்கள், நம்பிக்கை மோசடி என்பன ஏற்படும் போது பல சிக்கல்கள் உடனடியாக ஏற்படுவதாகவும் இலாபமற்ற துறைகளினிடையே திட்டமிட்ட செயற்பாடுகள் மற்றும் சிந்தனைகள் என்பன காணப்படாமையே பல்துறைகளின் ஒன்றிணைவு குறைவிற்கு காரணமாகும் எனவும் இங்கு குறிப்பிட்டுள்ளனர். இதற்கான தீர்வுகளாக பல்துறைகளின் இடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும், பல்துறைகளின் வேறுபாடுகளை கண்டறிய வேண்டும், ஆலோசனை மற்றும் தலையீடுகள் கவனம் செலுத்தப்படல் வேண்டும் போன்ற கருத்துக்கள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

Adlele (2011), என்பவரது ஆய்வானது ஆய்வு முடிவுகளை கொண்டதொரு புதிய முடிவினை கொடுத்த ஆய்வாக இருக்கின்றது. இது நைஜீரியாவில் சுகாதாரத்துறையை மையப்படுத்திய 'வளர்முக நாடுகளில் ஊடுருவல் ஒத்துழைப்பினை ஏற்படுத்தல்: முதன்மை சுகாதார பராமரிப்பு' எனும் தலைப்பில் இவரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் சுகாதாரத்துறை சார்ந்து மட்டுமே பல்துறைகளின் ஒத்துழைப்பினை முன்வைத்திருக்கின்றதுடன் சுகாதாரத்திற்கு கூட்டு நடவடிக்கைகள் வேண்டப்படுவதனையும் விளக்குகின்றார். மேலும் பொது சுகாதாரத்தில் பல்துறை கூட்டுக்களுக்கு சான்றுகள் மற்றும் நடவடிக்கைகள் வலுப்படுத்தலில் ஒரு நடவடிக்கை ஆராய்ச்சி முயற்சியில் இவ்வாய்வு ஒரு ஆராய்ச்சி திட்டத்தின் வளர்ச்சி மற்றும் தொடக்க முன்னுரிமைகள் தொடர்பாக விபரிக்கின்றதாகவும் இங்கு பல்துறைகளின் ஒன்றிணைவில் சுகாதாரத்துறையை மையப்படுத்தியதாகவும் காணப்படுகின்றது.

விக்டோரியாவினை மையப்படுத்தியாக Phouthava (2011), என்பவரால் ஆய்வொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்காக இங்கு அவதானிப்பு, நேர்காணல், குழுவிவாதம் மற்றும் கலந்துரையாடல் போன்ற மூலங்களினூடே முதனிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடும் விடயம் யாதெனில், கொள்கை வகுப்புக்களை மேற்கொள்ளலில் பல்துறைகளின் ஒன்றிணைந்த செயலாற்றமானது வெற்றிகரமான கொள்கை உருவாக்கத்திற்கு வழிவகுக்கின்றது என்ற கருத்தினை குறிப்பிடுகிறார். இங்கு இதற்காக பல்துறைகளின் இடையே கண்டுபிடிப்புக்கள் இடம்பெறுவதுடன் அதிகாரமளிப்புக்களும் இடம் பெற வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

Sharma & Kearins (2011), ஆகியோரது ஆய்வானது பின்வருமாறு அமைகிறது. அதாவது இங்கு அரச தொழில் நிறுவனங்கள் மற்றும் தனியார் பொது முகவர் அமைப்புக்கள் என்பன பல்துறைகள் சார்ந்து செயற்படுவதில் நேர், மறைத்தாக்கங்கள் உண்டு எனவும் கிராமப்புற பிராந்தியங்கள் பொருளாதார மேம்பாட்டுத்திறனை கொண்டுள்ளது எனவும் இப்பிராந்தியங்களில் பொருளாதார வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள (அரச, தனியார்) பல்வேறு பங்குதாரர்கள் இருப்பினும் அவர்கள் இடையே ஒன்றிணைவானது சரியாக இணைக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. இவை பொருளாதார மற்றும் பரவலான நிலையைக் கொண்டுள்ளது. இங்கு இதற்கான பரிந்துரைகளாக இந்நாடுகளில் பிராந்திய எல்லைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றிடையே பொருளாதார அபிவிருத்தி பிரதேசங்களை உருவாக்குதல் அத்தோடு பல்துறைகளின் இடையே நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளலுடன் திட்டங்களை மேற்கொள்ளல் வேண்டும் என குறிப்பிடப்படுவதனைக் காணலாம். இது இவ்வாய்வுக்கு உதவியாக அமைகிறது.

Shanon, Stephanie & Nabeel (2012), ஆகியோர் கனடாவின் வட தென் நிறுவனங்களை அடியாகக் கொண்டு வெளியிட்ட ஆய்வானது பின்வரும் விடயங்களினை முன்வைக்கிறது. அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி கருதி பல்துறைகளும் (அரச, தனியார், அரச சார்பற்ற) ஒன்றிணைவினை மேற்கொள்ள வேண்டும். தனியார் துறையின் இடைவெளிகளை பூர்த்தி செய்கின்ற கடமைப்பாடு ஏனைய அரச துறைகளுக்கு காணப்படுகின்றது. ஆகவே இங்கு தனியார் துறையை ஒழுங்கமைப்பதில் அரச துறைக்கான பங்கு காணப்படுகிறது. எனவே இதற்கு தனித்தனியே அன்றி ஒன்றிணைந்து ஈடுபடும் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என இவ்வாய்வினில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு இதற்காக நேர்காணல் முறையே தரவு சேகரிப்பு முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பிரதானமான தீர்மானங்களாக பொது, தனியார் மற்றும் இலாப நோக்கற்ற பல்துறைகளின் இடையே ஒரே வகையான குறிக்கோள்கள், நோக்கங்கள் என்பன ஒப்புக்கொள்ளப்பட வேண்டும், கொள்கை வகுப்பாளர்கள் கூட்டாண்மை பயிற்சிகளை வரையறுத்துக் கொள்ள வேண்டும், ஒவ்வொரு நிறுவனமும் தனது பலவீனங்களை தெரிந்து கொள்ள வேண்டும், வளங்கள் மற்றும் திறன்கள் பங்காளிகளால் கூட்டாண்மை மூலம் வினைத்திறனாக்கம் பெற வேண்டும், பல்துறை நபர்களிடையே இருக்கும் உறவு நிலையானதாகவும் சமூக, நிறுவன மதிப்புக்களை பேணுவதாகவும் கூட்டிணைவின் நோக்கத்தினை சார்ந்ததாகவும் இருக்க வேண்டும் என்ற விடயங்களை இவ்வாய்வானது குறிப்பிடுவதானது இவ்வாய்விற்கு துணை செய்கிறது.

அத்துடன் பல்துறைகளின் ஒன்றிணைவின் மூலம் பல பிரச்சினைகள் தீர்த்துக்கொள்ள முடியும் Beguy & Baron (2014). இவர்களது ஆய்வுகளின் மூலம் வெளிக்காட்டப்படுகின்றது. Beguy (2014), இன் கருத்துப்படி 'பல்துறைகளின் ஒன்றிணைவு' எனும் தலைப்பினூடாக பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. இங்கு நகர்ப்புற சூழலில் வசிக்கும் இளைஞர்கள் தமது சுயதிறன், பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை பாதிக்கும் சிக்கலான பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர். இச்சிக்கலான சூழலில் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்க முயற்சிக்கும் எந்தவொரு திட்டமும் சமூக, பொருளாதார காரணிகளை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே இதற்கு பல்துறைகளிடையே ஒத்துழைப்பு வேண்டும் என்கிறார். எனவே மோசமான நகர்ப்புற இளைஞர்களுக்கான நடத்தை மாற்றத்தினை சாதகமாக மாற்றிக்கொள்ளும் பொருட்டு பல்துறைகளிடையே ஒன்றிணைவு அவசியமாகின்றது.

மேலும் Baron (2014), குறிப்பிடும் போது பெரும்பாலான நாடுகளில் துறை சார்ந்த திட்டமிடல் மற்றும் சேவை வழங்கள் முக்கியமாகின்றன. எனவே இதனை மென்மேலும் சரிசெய்ய பல்துறைகளிடையே ஒன்றிணைவு அவசியமாகின்றது என குறிப்பிடுகின்றார்.

### 5.2. தேசிய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

இலங்கையை பொருத்தமட்டில் கட்காரி (2001), 'கூட்டு நிறுவன ஆளுகை பொதுத்துறை வங்கிகளுக்கான ஒரு நிகழ்ச்சி நிரல்' எனும் தலைப்பினைக் கொண்ட கட்டுரை ஒன்றில் அதன் ஆசிரியர் குறிப்பிடும் போது 'அனைத்து வெளி மற்றும் உள் துறை சார் அங்கத்தவர்களும் நடத்தை நெறிமுறையொன்றை பின்பற்ற வேண்டும். இதுவே பல்துறை கூட்டு ஆளுகை என விதந்துரைக்கின்றார். இதனால் பல நன்மைகளை அடையலாம் என்கிறார். அதாவது மனசாட்சி, பிரக்ஞை, ஒளிவு மறைவற்ற தன்மை மற்றும் திறந்த தன்மை என்பவற்றை கொண்ட ஒரு பல்துறை கூட்டாண்மை கலாச்சாரத்தை ஏற்படுத்தலாம்'. இங்கு முக்கியமாக வங்கிகளுக்கிடையே (பொது, தனியார்) ஒன்றிணைவினை வேண்டுவதாக அமைகின்றது. எனினும் இங்கும் பல்துறை ஒன்றிணைவிற்கான செயற்பாடுகள் குறித்த விடயங்கள் முன்வைக்கப்படவில்லை.

ஹேவகே (2002), 'இலங்கையின் மறுமலர்ச்சியில் பொதுத்துறை வகிக்க வேண்டியிருக்கும் பங்கு' எனும் கட்டுரையில் உயர்தரம் வாய்ந்த பொதுத்துறையிலிருந்து சக்தி மிக்க ஒரு தனியார் துறை எழுச்சியடைய முடியும். ஆகவே பொதுத்துறை, தனியார் துறை மற்றும் ஏனைய துறைகளிடையே பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு ஒன்றிணைவினை ஏற்படுத்த வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. அத்தோடு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி, அபிவிருத்தி அடிப்படை கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களை அடையும் பொருட்டு வளப்பகிர்வு மற்றும் தலைமைத்துவம் என்பன பல்துறைகளிடையே மேற்கொள்ளப்பட வேண்டும் என இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது. இங்கு முக்கியமாக பொருளாதார விவகாரங்களுக்கான பல்துறை ஒன்றிணைவினை வேண்டுவதாகவே அமைகிறது. இங்கும் பல்துறை ஒன்றிணைவிற்கான செயற்பாடுகள் குறித்த விடயங்கள் முன்வைக்கப்படவில்லை.

ரணசிங்க (2005), என்பவரது கட்டுரையொன்றில் இலங்கையை மையப்படுத்தியதாக இவர் பல்துறைகளின் ஒன்றிணைவு சார்ந்த கருத்துக்களை குறிப்பிட்டிருப்பதனை காணலாம். அந்தவகையில் இங்கு இதற்காக நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றினை ஆதாரமாக கொண்டுள்ளார். இவரது கருத்துப்படி இலங்கையில் மூலவளங்களின் விருத்திற்கும் வினைத்திறனாக்கத்திற்கும் பல்துறைகளானது ஒன்றிணைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் இவர் அதற்கான வழிவகைகளை குறிப்பிட மறுத்து விட்டார். மேலும் இவர் பொறுப்புக்களும் சமத்துவமும் துறைகளினிடையே பகிரப்படல் வேண்டும் எனவும் குறிப்பிட்டு அதன் மூலம் நாட்டு சமத்துவமின்மையை குறைத்து பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளமையானது இங்கு இவ்வாய்விற்கு உதவியாக அமைகிறது.

தயாரத்ன மற்றும் நிமல் (2005), ஆகியோர் இலங்கையை மையப்படுத்தி பல்துறைகளின் ஒன்றிணைப்பு சார்ந்த விடயங்களை முன்வைக்கின்றனர். இங்கு இவர்கள் குறிப்பிடுவதானது ஒத்துழைப்புக்கள் வழுப்படுத்தப்பட வேண்டும் எனவும் பன்முகப்படுத்தலுக்கு துறைவாரியான வலுப்படுத்தல் வேண்டும். அத்தோடு துறை சார் ஈடுபாட்டினை பல்துறைகளின் இடையேயும் ஏற்படுத்த வேண்டும் என்கிறார்கள்.

இங்கு தயாரத்ன (2005), என்பவர் குறிப்பிடும் முடிவானது பிராந்திய அபிவிருத்திற்கு துறை சார்ந்த, நிறுவனம் சார்ந்த ஏற்பாடுகள் வேண்டும் என்று குறிப்பிட நிமல் (2004), என்பவர் சுகாதாரக் கொள்கைகள், சீர்திருத்தங்களும் பன்முகப்படுத்தல் மூலமும் பல்துறைகளின் ஒத்துழைப்பு மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் சரியானதொரு வளர்ச்சிப் போக்கினைக்காட்டும் எனவும் குறிப்பிடுகின்றனர். எனவே இவர்களும் பல்துறைகளின் ஒன்றிணைவு அவசியம், அது வளர்ச்சிப்பாதையை சரியாக காட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்களே தவிர அதற்கான வழிவகைகளை குறிப்பிட மறுத்து விட்டனர். இவ்வாய்வு இடைவெளியை நிவர்த்திப்பதாக இவ்வாய்வானது இடம்பெறுகின்றது.

ரூபசேன (2013), எனும் சந்தைப்படுத்தல் பொருளியலாளர் உணவுப் பொருட்களை சந்தைப்படுத்தல்: பிரச்சினைகள், இடர்பாடுகள், தீர்வுகள் எனும் கட்டுரையில் குறிப்பிடும் போது சந்தைப்படுத்தலின் போதான பிரதான பிரச்சினைக்குக் காரணம் தனியார்த்துறை முன்வராமையும் அது ஏனைய, அரச துறைகளுடன் ஒத்துழைத்து செயற்படுவது போதாமையும் ஆகும் என குறிப்பிடுகின்றார். அதாவது அவர் குறிப்பிடும் போது விவசாயத்துறையில் தனியார் துறையினரின் பங்களிப்பானது துரித இலாபத்தினைத்தரும் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து மொத்த விற்பனை, சில்லறை விற்பனை ஆகிய குறைந்த ஐயப்பாடுடைய அம்சங்கட்கு வரையறுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார். அரச கொள்கையின் உறுதியின்மை காரணமாக ஏற்படத்தக்க உயரிய ஐயப்பாடே தனியார்த்துறை ஈடுபாடு, ஒன்றிணைவு குறைவாக இருக்க காரணமாகும் என்கிறார். எனவே இவர் இங்கு வலியுறுத்துவதானது அரசு, தனியார் துறையானது ஒன்றுடன் ஒன்று பிணைந்தவாறு ஒன்றிணைப்புடன் செயற்படல் வேண்டும் என விளக்குகின்றார்.

கொடிதுவக்கு (2013), என்பவர் தனது கட்டுரையில் இலங்கையின் கால்நடைக் கைத்தொழில் இன்றைய நிலை, பிரச்சினைகள், மாற்றுவழிகள் எனும் தலைப்பில் 2002 இல் வெளியிட்ட தகவல்களின்படி அவர் குறிப்பிடுவதானது கால்நடை வளர்ப்பு தொடர்பாக அரசானது தொடர்புபட்டிருந்தாலும் தனியார்த்துறையும் இது தொடர்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் சில வேளை அரசை விட தனியார்த்துறைக்கு இதனை சரியாக நிறைவேற்றிக் கொள்ள முடிவதுண்டு. எனவே இங்கு அரசானது தனியார்துறையினை போட்டியாக கருதாது அத்துறைகளுடன் ஒன்றிணைவினை ஏற்படுத்தும் பொருட்டு அவர்களுடன் இணைந்து செயற்படுவதால் கால்நடை வளர்ப்பினை அதிகரிக்கலாம். இதனால் அது சார் உற்பத்திப் பொருட்களினை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அடையலாம். அத்தோடு அரசினால் மேற்கொள்ள முடியாத நோய்த்தடுப்பு ஆய்வுகளினை தனியார் மேற்கொள்வதினால் அவர்களோடு இணைந்து ஊக்குவித்து செயற்படுவதினால் இங்கு அதிக இலாபத்தினை இரு துறையும் பெறமுடியுமாக அமையும் என இங்கு விளக்குகிறார். எனவே இங்கு பல்துறைகளின் ஒன்றிணைவு வேண்டப்படுகிறது.

சந்திரசேகரம் மற்றும் ரெஜினோலட் (2014), ஆகியோர் அறிவுப் பொருளியல் எனும் நூலில் குறிப்பிடும் போது பொருளாதார வளர்ச்சியை அடைய நான்கு தூண்கள் அவசியம் என்றதுடன் அத்தூண்களானது அரச, தனியார் மற்றும் இதர துறைகளின் மூலம் ஒன்றிணைந்து செயற்படல் எனும் கருவியின் மூலமாக பொருளாதார வளர்ச்சியை இலகுவாக அடைந்து கொள்கிறது என்பதனை இங்கு பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் முன்வைத்த கருத்துக்களில் இருந்து முன்வைக்கின்றனர். இவர்கள் குறிப்பிட்ட தூண்களாக புத்தாக்க முறைமை, மனித மூலதனம், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் பொருளாதார நிறுவன முறைப்பட்ட ஆட்சி முறைமை என்பனவாகும். இவற்றில் பல்துறைகள் ஒன்றிணைவின் மூலம் விருத்தியாக்கம் செய்ய வேண்டும்.

Dharmashri (2015), என்பவர் தனது கட்டுரையில் முன்னால் விஞ்ஞான தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சரான சுசில் பிரேம ஜயந்த அவர்களின் நேர்காணலின் போதான கருத்துக்கள் தொர்பாக குறிப்பிடும் போது 'இலங்கையை அறிவியல், விஞ்ஞான அபிவிருத்தியூடான வளர்ச்சியை அடையச் செய்ய வேண்டும். இதற்காக வேண்டி பல்துறைகளின் இடையே முக்கியமாக பத்திரிகைத்துறைகள் மற்றும் ஊடகத்துறையானது ஒன்றிணைந்து அதற்கான சந்தர்ப்பங்களினையும், ஊக்குவிப்புக்களையும் கொடுக்க வேண்டும். அத்தோடு பல்துறைகளும் ஒன்றிணையும் போதே இங்கு நாட்டுப் பொருளாதார வளர்ச்சி இடம் பெற முடியும்' எனக் குறிப்பிட்டதாக இவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

Dhulini (2016), எனும் ஆராய்ச்சி உதவியாளரொருவரின் கட்டுரையானது பின்வருமாறு அமைகிறது. அதாவது இலங்கையும் பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று சுதந்திரத்துக்குப் பிறகு பொருளாதார அபிவிருத்தியில் பின்னடைவிற்கு உள்ளாகியது. அரச, தனியார் மற்றும் இதர துறைகளிடையே காணப்படுகின்ற ஒன்றிணைவு சார் சமகால மற்றும் நீண்ட கால பிரச்சினைகளே இதற்கு காரணம். எனவே இதனை நீக்க தேசிய கொள்கைத் திட்டத்துடன் பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட கல்வியை துறைகளிடையே கொடுத்தல் வேண்டும். எனவே இங்கு பல்துறைகளின் ஒன்றிணைவு அத்தியவசியமான ஒரு விடயமாகும். எனவே இது கல்விக் கட்டமைப்பு மூலம் சீராக்கப்பட வேண்டும். அத்தோடு கல்வி, கட்டமைப்பு மாத்திரம் ஒன்றிணைவுக்காரணியாக அமையாது என்பதால் இவ்வாய்வானது இதனை ஆராயும் ஒன்றாக அமைகிறது.

றிஸ்வி (2016), 'இலங்கையில் சுற்றுலாத்துறை எதிர்காலத்தில் வளர்ச்சி பெறும் அறிகுறி' எனும் தலைப்பில் வெளியிட்ட கட்டுரையானது பல்துறை சார் ஒன்றிணைவினை வேண்டியதாக அமைகிறது. அந்தவகையில் இங்கு இன்றைய நவீன பொருளாதார வளர்ச்சி, சந்தைப்படுத்தல், நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் பல்துறைகளின் ஒன்றிணைவானது நாடுகளின் சுற்றுலாத்துறையினை ஊக்குவிக்கச் செய்து அதன் மூலமான அந்நியச் செலாவணியை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும். அத்துடன் அரச, தனியார் மற்றும் இலாபமற்ற துறைகள் ஒன்றிணைவதன் மூலம் கலாச்சார மற்றும் இயற்கையை பாதுகாக்க பங்களிப்புச் செய்தல் எனும் நோக்கில் பல்துறைகளின் இடையே ஊக்குவிப்பினையும் ஒன்றிணைவினையும் ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சுற்றுலா அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு செய்வதற்கான அமைப்பின் உறுப்புரிமையை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை பெறும் பொருட்டு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார முன்னால் அமைச்சர் ஜோன் அமரதுங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. எனவே பல்துறைகளின் ஒன்றிணைவினை ஏற்படுத்தல் மூலம் சுற்றுலாவினை மேம்படுத்தி பொருளாதார வளர்ச்சியை அடையலாம் என இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

நேசன (2017), எனும் நிறுவனத்தினால் இரும்புப்பாலங்களுக்கு பதிலாக புதிய ஒற்றையடிப் பாலங்கள் கருத்திட்டம் எனும் தொனிப்பொருளில் இலங்கையின் பின்தங்கிய பகுதி மக்களுக்கான போக்குவரத்துக்கான ஒற்றையடிப்பாதைகள் அமைக்கும் திட்டம் தொடர்பான ஓர் ஆய்வில் குறிப்பிடும் போது இங்கு இத்திட்டத்தில் அரச, தனியார் துறைகளினை ஒன்றிணைத்தவாறான வேலைத்திட்டங்கள் இடம் பெறுவதோடு இதன் மூலமாக அனைத்து துறையினையும் உள்ளடக்கும் வகையில் இலகுவான முறையில் திட்டத்தினை செய்து முடிக்கவும் திட்டமிட்டுள்ளது. அத்துடன் புதிய தொழிநுட்பம் மற்றும் புதிய அணுகுமுறைகள் பல்துறைகளிடமிருந்து பெற்று அதன் மூலமானதொரு புதிய ஆக்கத்தினை வெளிப்படுத்துவதே இவ்வாய்வு நோக்கமாக அமைகிறது. அத்துடன் நேர சிக்கனம், இலாபகரமான நிர்மாணிப்பு என்பனவும் இங்கு பல நன்மைகள் கொண்டதாக பல்துறைகள் இருக்கின்றதனைக் காணலாம். எனவே பல்துறைகள் ஒன்றிணைவு என்பது கட்டாயம் இடம் பெற வேண்டும். எனவே இதற்கான ஒரு தூண்டுகோலாக இவ்வாய்வு அமைகிறது.

Vidhya (2017), என்பவரது 'விஞ்ஞானத்தின் முன்னேற்றத்திற்கான புதிய தொழிநுட்ப பாவனை அவசியம்' எனும் தலைப்பினைக் கொண்ட கட்டுரையில் குறிப்பிட்டுள்ள விடயங்களாவன இவ்வாய்விற்கு மிகவும் துணையாக அமைந்தது. அதன்படி இங்கு இலங்கையில் காணப்படும் பல்துறைகளும் உயரிய சேவைகளை மக்களுக்கு வழங்கும் வகையில் செயற்படல் வேண்டும். மக்கள் தேவையை நிறைவேற்றும் முகமாக அதற்காக நிரம்பல்களினை இத்துறைகள் செய்ய வேண்டும். இதற்காக இத்துறைகளானது ஒன்றுடனொன்று ஒருங்கிணைப்புடன் செயல்படுவதால் மக்கள் தேவை நிறைவேற்றம் கண்டு முன்னேற்றமான பொருளாதார வளர்ச்சிப்பாதையை அடைய முடியும். எனவே இங்கு துறைகள் ஒன்றிணைய தொழிநுட்பமானது வலுப்படுத்தப்பட வேண்டும்.

Nayana (2017), எனும் இலங்கை தரக்கட்டளை நிறுவன பதில் பணிப்பாளர் ஊடக நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்ட விடயங்களானது இவ்வாய்விற்கானதொரு உந்து சக்தியாக காணப்படுகிறது. அந்தவகையில் இவர் குறிப்பிடும் போது இலங்கையில் தரச்சான்றிதழ்களை வழங்கும் நிறுவனமானது ஒரு உற்பத்தியை மேற்கொள்ளும் போது அதற்கான பரிசோதனைத்தளங்கள் பரவலாக இருத்தல் வேண்டும். அப்போது தான் சிறந்த தரமான வெளியீட்டை மக்களுக்கு கொடுத்து பயனைப்பெற முடியும் எனக் குறிப்பிடுகிறார். எனவே இங்கு உற்பத்தி தர நிர்ணயம் பல்துறைகள் மூலமும் நிரூபனம் செய்யப்பட்டே சந்தைக்கு விடப்படுகின்றது. இதற்கு பிரதான காரணம் பல்துறைகளின் ஒன்றிணைந்த செயற்பாடுகளாகும். இதுவே பொருட்களை காலதாமதம் இன்றி சந்தைக்கு வழங்கவும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அடையவும் துணை செய்கிறது எனக் குறிப்பிடுகின்றார். எனவே இங்கு திறமையான பல்துறைகளின் அதிகாரிகள் உருவாக்கப்பட்டு துறைகளின் இடையே ஒன்றிணைவானது பேணப்படல் வேண்டும்.

துலிப் நயனப்பிரிய (2018), எனும் விஞ்ஞான தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஊடகப்பிரிவினரான இவர் 'சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி மேம்பாட்டின் ஒருங்கிணைந்த வேலைத்திட்டம்' எனும் தலைப்பில் 2018 ஆம் ஆண்டு வெளியிட்ட கட்டுரையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது கீழ்மட்ட தொழில் முயற்சிகளுக்கு அதிக பெறுமதியை வழங்கி தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்பதனை நோக்காகக் கொண்டதாக அமைகிறது. இங்கு இதற்காக நிதிச்சேவைகள், ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைதல் வேண்டும் என்றும் இதற்கான ஆலோசனை, சேவை வழங்கள் மற்றும் வேலைத்திட்டம் நடாத்தல் என்பன மூலம் பல்துறைகளிடையே ஒருங்கிணைப்புடனான வேலைத்திட்டங்களை செய்து சிறந்த பயனை பெற நாடுகின்றது.

மேலும் அவர் குறிப்பிடும் போது இங்கு இவ்வாறான வேலைத்திட்டம் மூலமாக கிராமிய இயற்கை வளங்களுக்கு அதிக பெறுமதியை வழங்கி பலம் மிக்க மனித வளங்களின் ஊடாக கிராமிய பொருளாதாரத்தினை பலப்படுத்த முடியும் எனவும் இதன் மூலம் நாடுகளது தேசிய பொருளாதாரம் மற்றும் அதன் வளர்ச்சியை பலப்படுத்த முடியும் எனவும் குறிப்பிடுகின்றார். எனவே இவர் இங்கு பல்துறைகள் ஒன்றிணைய வேண்டும் என்ற கட்டாயத்தேவையை குறிப்பிட்ட அதே நேரம் அவற்றினை ஒன்றிணையச் செய்வதற்கான வழிவகைகளை குறிப்பிட மறுத்து விட்டார். எனவே இவ்விடைவெளியை பூர்த்தி செய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

இவ்வாறான ஆய்வுகள் பிரித்தானியா, ருவாண்டா, எத்தியோப்பியா, கனடா மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் பல நோக்குகளுக்கான பல்துறைகளின் இடையே ஒன்றிணைவினை வேண்டும் பொருட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. எனினும் இன்று வரை இலங்கையில் இவ்வாய்வுத் தலைப்பு தொடர்பான ஆய்வுகள் பரவலாக காணப்படவில்லை. அத்துடன் பல்துறைகளின் இடையே ஒன்றிணைவினை ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சியையும் அடைய முடியும். எனினும் இன்றுவரை இலங்கையில் பல்துறை ஒன்றிணைவிற்கான செல்வாக்கு காரணிகள் தொடர்பான தீர்வுகளைக் கொண்ட ஆய்வுகள் பரவலாக மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும் எவ்வாறு ஒன்றிணைவினை ஏற்படுத்தலாம் தொடர்பான ஆய்வுகள் காணப்படுவதில்லை என்பதாலும் கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவியாகும் பொருட்டும் தெளிவான விளக்கங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

## REFERENCES

Ahuja, H. L. (2004). *Modern Microeconomics Theory and Application*. New Delhi, S. Chand & Company Ltd.

Alter, C. and Hage, J. (1993). *Organizations Working Together*, Newbury Park, CA, Sage. Retrieved August 15, 2018

Amin, A. (1999). An Institutionalist Perspective on Regional Economic Development. *International Journal of Urban and Regional Research,* 23(2), pp. 365-378. Retrieved August 15, 2018

Ansell, C., & Gash, A. (2007). Collaborative Governance in Theory and Practice. *Journal of Public Administration Research and Theory,* 18(4), pp. 543–571. Retrieved August 15, 2018

Asheim, B. T., Smith, H. L., & Oughton, C. (2011). Regional Innovation Systems : Theory *, Empirics and Policy, Regional Studies* 45(7), pp. 875–891. Retrieved August 15, 2018

Axelrod, R. (1984) *The evolution of co-operation*, New York: Basic Books.

Beckley, T. M., Martz, D., Wall, E., Reimer, B., & Nadeau, S. (2008). Multiple Capacities , Multiple Outcomes : Delving Deeper into the Meaning of Community Capacity. *Journal of Rural and Community Development,* 3(3), pp. 56–75. Retrieved October 10, 2018

Brophy, P.C., & Godsil, R.D. (2009). Chapter 8: Anchor Institutions as Partners in Building Successful Communities and Local Economies, In: Retooling HUD for a Catalytic Federal Government: A Report to Secretary Shaun Donovan, pp. 147-168. Philadelphia: Penn 153 Institute for *International Journal of Urban Research*, University of Pennsylvania. Retrieved October 10, 2018

Butterfoss, F.D. (2007). *Coalitions and partnerships in community health*. San Francisco, California: John Wiley & Son.

Central Bank of srilanka.(1990-2017). *Central Bank Annual Reports*. Colombo, Srilanka:Author.

Gibson, R. (2011). *A Primer on Collaborative Multi-Level Governance. Canadian Regional Development: A Critical Review of Theory, Practice, and Potentials,* pp. 1–10. Retrieved October 10, 2018

Gray, B. (1996). *Cross-Sectoral Partners: Collaborative Alliances among Business, Government and Communities.* In C. Huxham (Ed.), Creating Collaborative Advantage (pp.57-79). London: Sage Publications.

Hooghe, L., & Marks, G. (2001). *Types of Multi-Level Governance.* EIoP, 5(11), pp. 1–24.

Henton, D., Melville, J., Amsler, T., & Kopell, M. (2005). *Collaborative governance: A guide for grantmakers. California:* William and Flora Hewlett Foundation.

Lee, I., Feiock, R. C., & Lee, Y. (2011). *Competitors and Cooperators: A Micro-Level Analysis of Regional Economic Development Collaboration Networks.*

Nelles, J. (2013). Cooperation and Capacity? Exploring the Sources and Limits of City-Region Governance Partnerships. *International Journal of Urban and Regional Research,* 37(4), pp. 1349–1367. August 18, 2018

Selsky, John W., & Barbara Parker. 2010. Platforms for Cross-Sector Social Partnerships: Prospective Sensemaking Devices for Social Benefit. *Journal of Business Ethics*, pp. 21–37. Retrieved October 18, 2018

Wood, D. & Gray, B. (1991). Collaborative alliances: Moving from practice to theory. *Journal of Applied Behavioral Science,* pp. 3-22. Retrieved October 18, 2018

அமிர்த்தலிங்கம், கோ. (2013). *இலங்கைப் பொருளாதாரம்:* பூபால சிங்கம் வெளியீட்டகம். செட்டியார் தெரு, கொழும்பு-11.

கட்காரி, ஆர்.ஜி. (2001, ஜுன்/மார்ச்). கூட்டு நிறுவன ஆளுகை பொதுத்துறை வங்கிகளுக்கான ஒரு நிகழ்ச்சி நிரல். *பொருளியல் நோக்கு,* மக்கள் வங்கி ஆராய்ச்சிப்பகுதி, ப.7.

கலீல், எம். (2016, ஆகஸ்ட்). *மானிடப்புவியியல்:* புவியியல் துறை. தென் கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், ப.271-275.

ஹேவகே, ஏ. (2002, நவம்பர்/டிசம்பர்). இலங்கையின் மறுமலர்ச்சியில் பொதுத்துறை வகிக்க வேண்டியிருக்கும் பங்கு. *பொருளியல் நோக்கு,* மக்கள் வங்கி ஆராய்ச்சிப்பகுதி, ப.12-20.